தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-600 006.

www.Padasalai.Net

ந.க.எண். 34785 /எம்/இ1/2023 நாள்: .11.2024

பொருள்:- பள்ளிக்கல்வி – பள்ளி மன்ற செயல்பாடுகள் - சிறார் திரைப்படம் திரையிடுதல் 2024-25 – அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 6-9 வகுப்பு மாணவர்கள் கண்டு விவாதித்தல் - சிறார் திரைப்படம் திரையிடுதல் – விழிப்புணர்வு குறும்படம் திரையிடல் - வழிகாட்டும் நெறிமுறைகள் வழங்குதல் – சார்ந்து.

பார்வை:- 1 தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் மற்றும் தொடக்கல்வி இயக்குநரின் இணை செயல்முறைகள் ந.க.எண். 34785 /எம்/இ1/2022 நாள் 19.05.2023, 06.12.2023

2 தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், கடித ந.க.எண்.34785/எம்/இ1/2023, நாள்.04.01.2024.

----------

2022-23 மற்றும் 2023-24 ஆம் ஆம் கல்வியாண்டில், அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் 6-9 வகுப்பு வரை பயின்று வரும் மாணவர்கள் கண்டுணறும் வகையில், ஒவ்வொரு மாதத்தின் இரண்டாவது வாரத்தில் சிறார் திரைப்படங்கள் திரையிடப்பட்டன. மாணவர்கள் தாங்கள் வாழும் சூழலை புரிந்து கொள்ளுதல், பல்வேறு கலாச்சாரங்களின் தனித்தன்மையை அறிந்து கொள்ளுதல், தன்னம்பிக்கை, நட்பு பாராட்டுதல், குழுவாக இணைந்து செயல்படுதல், பாலின சமத்துவம் உணர்தல் ஆகிய பண்புநலன்களை அடையாளம் காணுதல், தங்களிடம் உள்ளார்ந்து புதைந்திருக்கும் படைப்பாற்றலை வெளிக்கொணர செய்தல் ஆகியன இச்சிறார் திரைப்படம் திரையிடுதலின் முக்கியமான நோக்கமாக அமைகிறது.

ஒரு திரைப்படத்தை வெறுமனே நகரும் பிரேம்களாக பார்ப்பதை விட, சர்வதேச சினிமா பற்றி குழந்தைகளுக்கு ஒரு பரந்த கருத்தை வழங்குவது. பள்ளிகளில் மாணவர்களின் கல்வியை வேறுபட்ட முறையில் அணுகுதல், கலை, கலாசாரம் மற்றும் திரைப்படங்களை ஒருங்கிணைத்து பிள்ளைகளின் கற்பனைத்திறன், படைப்பாற்றலை வளர்த்தல். மேலும், இத்திரைபடங்களை கண்ணுறும் மாணவர்களின் விரிசிந்தனை மேம்படுதல் மற்றும் விமர்சிக்கும் திறன் உள்ளிட்ட பண்புகளை பெற இந்நிகழ்வு தூண்டுகோலாக அமைகிறது.

**திரைப்பட மன்றம் (மூவி கிளப்) நோக்கங்கள்:**

- திரைப்படங்களை விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்தல், திரைப்பட நுட்பங்களைப் புரிந்துகொள்ளுதல், பல்வேறு வகைகள் மற்றும் கருப்பொருள்களுக்கு இடையில் வேறுபடுதல், ஊடக கல்வியறிவு மற்றும் விமர்சன சிந்தனையை வளர்த்தல்.

Scanned with OKEN Scanner

- திரைப்பட விமர்சனங்கள், திரைக்கதை எழுதுதல், நடிப்பு அல்லது திரைப்படத் தயாரிப்பு மூலம் மாணவர்கள் தங்கள் எண்ணங்கள், யோசனைகள் மற்றும் முன்னோக்குகளை ஆக்கப்பூர்வமாக வெளிப்படுத்த ஒரு தளத்தை வழங்குதல்.
- கேமராக்கள், எடிட்டிங் மென்பொருள், லைட்டிங் மற்றும் ஒலி போன்ற திரைப்படத் தயாரிப்பு தொடர்பான தொழில்நுட்ப திறன்களை வளர்ப்பதற்கான வாய்ப்பை மாணவர்களுக்கு வழங்குதல் மற்றும் இது சார்ந்த தொழில் ஆர்வத்தை ஊக்குவித்தல்.
- சினிமா துறையில் கதை எழுதுதல், திரைக்கதை, இயக்கம், எடிட்டிங், இசை போன்ற பல்வேறு பணிகளில் ஈடுபடும் நபர்களுடன் கலந்துரையாடுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.
- திரைப்படக் கலையில் ஆர்வமுள்ள மாணவர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கான போட்டிகளில் பங்கேற்க செய்தல்.

www.Padasalai.Net

**திரைப்பட விவரம்**

ஒவ்வொரு மாதமும், இரண்டாவது வாரத்தில் சிறார் திரைப்படம் திரையிட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொரு மாதமும் திரையிடப்படவுள்ள திரைப்படம் முன்கூட்டியே மாதத்தின் முதல் வாரத்தில் EMIS வழியே தலைமையாசிரியருக்கு அனுப்பி வைக்கப்படும்.

இந்த ஆண்டின் முதல் சிறார் திரைப்படமானது கடந்த ஆண்டு நடைபெற்ற போட்டிகளில், மாணவர்கள் தயாரித்த "டாப் 10" என்ற தலைப்பில், குழந்தைகள் தினத்தையொட்டி நவம்பர் - 2024 ஆம் மாதத்தில் திரையிடத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், குழந்தைகளின் மனநலத்தினை செறிவூட்டுவதற்காக 14416 சிறப்பு எண் வசதியினை ஆசிரியர்கள் மற்றம் கழந்தைகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக விழிப்புணர்வு குறும்படமும் திரையிடப்பட உள்ளது. இத்திரைப்படம் பள்ளிகளில் திரையிடுதல் சார்ந்து பள்ளி தலைமையாசிரியர்கள் பின்பற்ற வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள் பின்வருமாறு வழங்கப்படுகிறது.

**வழிகாட்டும் நெறிமுறைகள்:**

- அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைபள்ளிகளில் 6 முதல் 9 வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு, குறிப்பிட்ட சிறார் திரைப்படங்கள் திரையிடலுக்கென ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளையில் இத்திரைப்படத்தினை திரையிடுதல் வேண்டும்.
- திரைப்படம் திரையிடலுக்கான நிகழ்ச்சி நிரல் இணைப்பு-1ல் வழங்கப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு பள்ளியிலும் சிறார் திரைப்படம் திரையிடுதல் தொடர்பான நிகழ்வுகளை ஒருங்கிணைக்க ஒரு பொறுப்பாசிரியரை நியமிக்க வேண்டும்.

Scanned with OKEN Scanner

- பள்ளி சூழலுக்கேற்ப, மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பின் முன்கூட்டியே திட்டமிட்டு மாணவர்களை குழுக்களாக பிரித்து கற்றல், கற்பித்தல் செயல்பாடுகளுக்கு எவ்வித இடையூறுமின்றி திரையிடல் நிகழ்வினை மேற்கொள்ள வேண்டும்.
- அனைத்து மாணவர்களும் **திரைப்படத்தை காண்பதற்கு நல்ல காற்றோட்டத்துடன் போதுமான இடவசதி உள்ள அறையை தெரிவு செய்ய வேண்டும்.**
- திரையிடுதலுக்கு முன், **திரைப்படக்காட்டி மற்றும் ஒலிப்பெருக்கி சாதனங்கள் சரியாக இயங்குவதை உறுதி செய்திட வேண்டும்.** குழந்தைகள் சிறந்த திரைப்பட அனுபவத்தை பெற ஏதுவாக, **வெளிப்புற ஒளி குறைவாக இருப்பதையும் போதுமான காற்றுவசதி உள்ளதையும் உறுதி செய்திடல் வேண்டும்.**

www.Padasalai.Net

- மின்சாதனங்கள் அதிக வெப்பமடையாதிருக்க நடவடிக்கை மேற்கொள்வதுடன் மின் இணைப்புகள் அனைத்தும் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும். மேலும், **மின்சாதனங்களை மாணவர்கள் எளிதில் அணுக இயலாத வகையில் உரிய முன்னேற்பாட்டு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.**
- குறிப்பு: EMIS வாயிலாக வழங்கப்படும் இத்திரைபடம் மாணவர்களுக்கென பிரத்யேகமாக தொகுக்கப்பட்டுள்ளது. எனவே, **EMIS தளத்திலிருந்து மட்டுமே திரைப்படத்தினை திரையிடுதல்/பதிவிறக்கம் செய்தல் வேண்டும்.** பிற வலைதளங்களிலிருந்து இத்திரைப்படம் திரையிடுதல்/பதிவிறக்கம் செய்தல் கூடாது.
- EMIS இணையவழியே தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்களுக்கான உள்நுழைவு அடையாளங்களை(LoginID) பயன்படுத்தி, திரைப்படத்தினை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். முன்கூட்டியே, பதிவிறக்கம் செய்து, Pen drive அல்லது **DVDல் சேமித்து வைத்து** Hi-tech lab/TV/Projector/Smart Board வாயிலாக **ஒலிபெருக்கி** (Speaker) வசதியுடன் மாணவர்களுக்கு திரையிட வேண்டும். இவ்வசதி இல்லாத பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் வாயிலாக உரிய வசதிகள் ஏற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளலாம்.
- திரைப்படம் திரையிடப்படுவதற்கு முந்தைய வாரத்தில், தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்கள் EMIS செயலியில் உள்ள திரைப்படத்தின் **சுவரொட்டியினை** (Poster) (A4 அளவு தாளிற்கு குறைவில்லாமல்) பள்ளி வளாகத்தில் மாணவர்கள் அறிந்திடும்வகையில், **அறிவிப்பு பலகையில் ஒட்ட வேண்டும்.**
- திரையிடப்படவுள்ள திரைப்படத்தின் கதைச்சுருக்கம் முன்கூட்டியே வழங்கப்படும். திரைப்படம் திரையிடும் நாளுக்கு முன்னரே தலைமையாசிரியர்/பொறுப்பாசிரியர் திரைப்படத்தைப் பார்க்க வேண்டும். திரையிடப்படுவதற்கு முன்னர், மாணவர்களை ஆர்வமூட்டும்வகையில், **திரைப்படம் சார்ந்து சிறு முன்உரையாடல் நிகழ்த்தப்பட வேண்டும்.**

Scanned with OKEN Scanner

www.Padasalai.Net

- திரைப்படம் திரையிடப்பட்டு முடிந்த பிறகு, படத்தின் மையக்கருத்து/திரைப்படம் ஏற்படுத்திய தாக்கம் குறித்து உரையாடல் நிகழ்த்த ஏதுவாக கலையில் ஆர்வமுள்ள துறைசார் வல்லுநரை சிறப்பு அழைப்பாளராக அழைக்கலாம்.
- திரையிடும்போது தொழிற்நுட்ப காரணங்களால் இடையூறுகள் ஏதேனும் ஏற்படின், திரையிடுதலை தற்காலிகமாக நிறுத்தி, சரிசெய்து திரையிடுதல் மீள தொடங்கப்பட வேண்டும்.
- திரையிடல் நிகழ்வினை ஆவணப்படுத்தும்போது மாணவர்களின் கவனத்தை சிதறடிக்காத வண்ணம் செயல்பட வேண்டும்.
- திரைப்படம் சார்ந்து மாணவர்களின் கருத்துகளை இணைப்பு-4 ல் வழங்கப்பட்டுள்ள பின்னூட்டக் (feedback) கேள்வித்தாள் வாயிலாக பெறுதல் வேண்டும்.
- திரைப்படம் மற்றும் அதன் கதைக்களம், மையக் கதாபாத்திரங்கள், துணை நடிகர்களின் கதாபாத்திரங்கள், ஒளிப்பதிவு, கதைநிகழ்வுகள், கதைப்போக்கு, முடிவின்தன்மை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களின் கவனத்தை அறிந்துணரும் வினாக்களை கேட்கலாம்.(மாதிரி இணைப்பு 3 இல் வழங்கப்பட்டுள்ளது)
- ஒவ்வொரு மாதமும், சுமார் 5 **மாணவர்களை குழுக்களாகப் பிரித்து திரைப்படம் குறித்து** 2-3 **நிமிடங்கள் பேச செய்யவேண்டும்**. திரைப்படம் குறித்து மாணவர்கள் தமது கருத்துக்களை **சொந்த நடையில் எழுதச் செய்தல், படம் குறித்த விமர்சனம், பாத்திரம் குறித்த திறனாய்வு, படக்கதையின் சுருக்கம், படத்தில் தான் உணர்ந்தவற்றை விவரித்தல்** போன்ற செயல்பாடுகளில் அனைத்து மாணவர்களும் ஈடுபடுதலை ஊளக்குவிக்க வேண்டும்.
- மாணவர்களின் படைப்புகளை ஆவணப்படுத்துவதுடன் சிறந்த படைப்புகளை பள்ளிக் கல்வித் துறையால் வெளியிடப்படும் சிறார் இதழில் இடம் பெற்றிட உறிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

<u>கண்காணித்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல்</u>

- <u>ஒன்றிய அளவில்</u>

வட்டாரக் கல்வி அலுவலர்கள், வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பள்ளிகளில் சிறார் திரைப்படம் திரையிடப்படுதலை உறுதி செய்து உரிய பார்வை விவரங்களை பள்ளிப்பார்வை செயலியில் பதிவு செய்ய வேண்டும்.

Scanned with OKEN Scanner

www.Padasalai.Net

- **மாவட்ட அளவில்**

மாவட்ட அளவில் முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள், உதவி திட்ட அலுவலர்கள், பள்ளி துணை ஆய்வாளர்கள், சிறார் திரைப்படம் திரையிடப்படுதலை உறுதி செய்து பார்வையிட்டு, பள்ளிப்பார்வை செயலியில் பதிவு செய்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்டுள்ள அனைத்து வழிகாட்டு நெறிமுறைகளையும் தவறாமல் பின்பற்றி ஒவ்வொரு மாதமும், மாநில திட்ட இயக்கத்தால் பரிந்துரைக்கப்படும் திரைப்படத்தினை பள்ளிகளில் 6 முதல் - 9 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு திரையிட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு :

1. திரைப்படத் திரையிடல் அமர்விற்கான மாதிரி நிகழ்ச்சி நிரல்
2. நவம்பர் 2024 மாதத்திற்கான திரைப்படத்திற்குரிய சிறார் திரைப்படத்தின் சுருக்கம்
3. மாணவர்களின் கவனத்தை ஈர்த்து ஆர்வத்தை தூண்டும் வினாக்கள்
4. பின்னோட்ட படிவம்.

Advanced Copies Communicated

பள்ளிக் கல்வி இயக்குநர்

11/11

பெறுநர்

முதன்மைக்கல்வி அலுவலர்கள், அனைத்து மாவட்டங்கள்

நகல்

1. மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை-600006.
2. உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள், சென்னை-600006
3. இயக்குநர், தொடக்க கல்வி இயக்குநரகம், சென்னை-600006

Scanned with OKEN Scanner

www.Padasalai.Net

<u>இணைப்பு 1: திரைப்படத் திரையிடல் அமர்விற்கான நிகழ்ச்சி நிரல்</u>

படம்: "டாப் 10" கால அளவு: 45 நிமிடங்கள் (சிறப்பு அழைப்பாளர்களுடன்)

| வ.எண் | கால அளவு | செயல்பாடுகள் | நடத்தக்கூடியவர் / உறுதி |
|---|---|---|---|
| 1 | 10 நிமிடங்கள் | படம் திரையிடுவதற்கு வகுப்பறை தயாராக உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் | பொறுப்பு ஆசிரியர் |
| 2 | 15 நிமிடங்கள் | திரைப்படம் திரையிடப்படும் அறையில் அனைத்து குழந்தைகளையும் கூட்ட வேண்டும் | வகுப்பு ஆசிரியர்கள் உதவியுடன் பொறுப்பு ஆசிரியர் |
| 3 | 5 நிமிடங்கள் | சிறப்பு அழைப்பாளர் அறிமுகம் (சிறப்பு அழைப்பாளர் திரைப்படம் தொடங்கும் முன்னரே வருவதை உறுதிப்படுத்தி கொள்ளவும்) | த.ஆசிரியர்/ பொறுப்பு ஆசிரியர் |
| 4 | 5 நிமிடங்கள் | படத்தின் அறிமுகம் (கதை சுருக்கம்) (இணைப்பு - 2) | பொறுப்பு ஆசிரியர் |
| 5 | 30 நிமிடங்கள் | படம் திரையிடல் | பொறுப்பு ஆசிரியர் |
| 6 | 2 நிமிடங்கள் | விழிப்புணர்வு குறும்படம் (மனநலம்) | பொறுப்பு ஆசிரியர் |
| 7 | 15 நிமிடங்கள் | சிறப்பு அழைப்பாளர் உரை | பொறுப்பு ஆசிரியர் அறிமுகப்படுத்தி பேச அழைத்தல் |
| 8 | 15-20 நிமிடங்கள் | கருத்து கேட்பு அமர்வு (இணைப்பு - 4) | 5 குழந்தைகள் கொண்ட குழு |
| 9 | 30 நிமிடங்கள் | ஸ்பாட்லைட் கேள்விகள் (Spotlight) (Spotlight கேள்விகளுடன் சேர்த்து மாணவர்களின் அறிவியல் ஆர்வத்தை தூண்டும் வகையிலான கேள்விகளை கேட்டு உரையாடல்களை நிகழ்த்தலாம்). (இணைப்பு - 3) | பொறுப்பு ஆசிரியர் (ஒரு பெரிய குழுவாக இருந்தால் பிற ஆசிரியரின் உதவியை பெறலாம்) |
| 10 | 5 நிமிடங்கள் | நன்றி உரை | பொறுப்பு ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியர் |

Scanned with OKEN Scanner

www.Padasalai.Net




இணைப்பு-2

கதை சுருக்கம்- டாப் 10

இயக்கம்: 6-9 வகுப்பு அரசுப் பள்ளி மாணவர்கள்

வெளியான ஆண்டு: ஏப்ரல் 2024

மொழி: தமிழ்

திரைப்படத்தின் காலம்: 45 நிமிடங்கள்

உங்கள் கண்களுக்கு காட்சியாக போகும் இந்த சிறார் திரைப்படங்கள் அனைத்தும் ஒரே இடத்தில் (Anna Cenanary Library) உருவாக்கப்பட்டது ஆகும். இந்தத் திரைப்படங்கள் மாணவர்களின் பன்முகத்தன்மையை இனம் கண்டு, ஒரு திரைப்படத்தை எப்படி பார்க்க வேண்டும், எப்படி புரிந்து கொள்ள வேண்டும், ஒரு திரைப்படத்தின் திரைக்கதை என்பது என்ன? படத்தொகுப்பு என்பது என்ன? இயக்கம் என்பது என்ன? நடிப்பு என்பது என்ன? காட்சி அமைப்பு என்பது என்ன? என்பதெல்லாம் பல்வேறு ஆளுமைகளால் மூன்று நாள் பயிற்சி வகுப்பாக சொல்லித் தரப்பட்டு அதன் பின் சிறார்கள் தங்களுடைய பார்வையில் கதைகள் உருவாக்கி எடுக்கப்பட்டவை ஆகும். அந்தக் கதைகளை சின்னஞ்சிறு கற்பனை கூட்டுக்குள் நட்பு என்றால் என்ன? நூலகம் என்ன செய்யும்- புத்தகம் எல்லாவற்றையும் விட உயரமானது, ஊனம் ஒரு தடை அல்ல, இயற்கையை நேசிப்போம், படித்தால் தான் உயர முடியும், ஒவ்வொருவரின் உழைப்பும் அங்கீகரிக்கப்பட வேண்டும்; என்று பறந்து விரிந்த பார்வையில் பண்பாட்டின் கலாச்சார கூறுகளை புரிந்து கொண்டவர்களாக மழலைகள் ஒரே நாளில் யோசித்து இயக்கி படத்தொகுப்பு செய்து இனிமையான இசை கோர்ப்போடு தந்தவைதான் இந்த படைப்புகள்.

இவை அனைத்தும் திரைத்துறையைச் சேர்ந்த இயக்குனர்கள் சிறந்த பட தொகுப்பாளர் இவர்கள் முன்னால் திரையிடப்பட்டு, சிறந்த நடிகர், சிறந்த படத்தொகுப்பாளர், சிறந்த இயக்குனர், சிறந்த இசை கோர்ப்பு என்று பல்வேறு விதமான விருதுகள் வழங்கப்பட்டு மழலைகளின் எண்ணம் திரை வானில் மின்னும் நட்சத்திரங்களாக நாளை உலா வர அவர்களுக்கு இந்தத் திரை மொழி பகிரப்பட்டு இன்றைக்கு உணர்வும் அறிவும் கலந்த உன்னதமாக உங்கள் பார்வைக்கு வருகிறது.

Scanned with OKEN Scanner

www.Padasalai.Net

இணைப்பு-3.

<u>மாணவர்களின் கவனத்தை ஈர்த்து ஆர்வத்தை தூண்டும் வினாக்கள்</u>

**(இந்த மாதத்திற்கான சிறார் திரைப்படம் பத்து திரைபடங்களின் தொகுப்பாக இருப்பதால் ஆசிரியர் ஏதேனும் ஒரு சில திரைப்படங்களை தேர்ந்தெடுத்து கீழக்காணும் வினாக்களை கேட்கவேண்டும்)**

1. கதையின் தொடக்கத்தில், இடையில் மற்றும் முடிவில் என்ன நடக்கிறது?
2. இந்த கதை எந்த இடத்தில் நடக்கிறது?
3. இந்த கதை எங்கு நடக்கிறது என்று எப்படி அறிவது?
4. திரைப்படத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட முக்கிய கதாபாத்திரங்கள் உள்ளனவா?
5. இக்கதை முக்கிய கதாபாத்திரத்தை தழுவி உள்ளதா அல்லது பிறரை சார்ந்து அமைகிறதா?
6. இத்திரைப்டத்தின் முழு கருத்தையும் மூன்று நிமிடங்களில் உங்களால் நடித்துக் காட்ட முடியுமா?

Scanned with OKEN Scanner

www.Padasalai.Net

இணைப்பு-4

திரைப்படம் திரையிட்ட பின் உரையாட வேண்டியவை

Template for the feedback:

1. இந்த திரைப்படங்கள் உங்களுக்கு பிடித்திருக்கிறதா?
2. இத்திரைப்படங்களின் மூலக்கரு / மையக் கருத்து என்ன?
3. கதைகள் எதைப் பற்றியது அல்லது யாரைப் பற்றியது? அதை எப்படி அறிந்து கொண்டீர்கள்?
4. கதைகளில் நிகழும் மிக முக்கியமான சம்பவங்கள் என்னென்ன?
5. தங்களை மிகவும் கவர்ந்த கதாப்பாத்திரங்கள் எவை?
6. திரைப்படங்களின் வாயிலாக தாங்கள் கற்றுக்கொண்ட முக்கிய கருத்துகள் என்னென்ன?
7. இத்திரைப்படங்கள் எடுக்கப்பட்டுள்ள நிகழ்விடம் படங்களுக்கு எவ்வாறு சிறப்பு செய்கிறது?
8. இப்படங்களில் இசைக்கு எவ்வாறு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது?
9. இத்திரைப்படங்களை பற்றி உங்களுக்கு தெரிந்தவர்களுடன் உரையாடுவீர்களா, மற்றும் அவர்கள் இப்படத்தை காண சொல்வீர்களா? ஏன்?
10. இத்திரைப்படங்கள் பற்றி உங்களின் எண்ணங்களை 2 வரிகளில் எழுதுக.

...............

Scanned with OKEN Scanner

www.Padasalai.Net

<u>இணைப்பு-5</u>

1. மனச்சோர்வு ஏற்படும் பொழுது அழைக்க வேண்டிய எண் என்ன?

2. "14416" தொலைபேசி / அலைபேசி தொடர்பு கொண்ட அனுபவப் பகிர்வு குறித்து 2 வரி எழுதுக.

3. மனநலம் உடல் நலத்திற்கான அடிப்படை -. விவாதிக்கவும்.

---

Scanned with OKEN Scanner